(2) THE MADRAS ESSENTIAL ARTICLES CONTROL AND REQUISITIONING (TEMPORARY POWERS) AMENDMENT BILL, 1966.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move.

" That leave be granted for the introduction of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1966."

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1966. "

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

VII.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS

* திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : கனம் சபாநாயகர் அவர்களே,

" கவர்னர் அவர்களுக்கு நன்றியுரை கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படவேண்டும் :

' 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 28-ம் தேதியன்று இரண்டு சபைகளும் சேர்ந்த சட்டப் பேரவையின் கூட்டத்தில் கவர்னர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு, a தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர் " என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த தீர்மானத்தை நான் ஆமோதிக்கிறேன்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களுடைய உரையினுக்கு நன்றி தெரிவிக்கும் முறையிலே நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த நன்றி உரையிலே, கவர்னர் பெருமான் அவர்கள், கீழே குறிப்பிட்ட விஷயங்களைக் குறிப்பிடக்கூடிய நிலைமை இருக்கிறது. கவர்னர் பெருமான் தன் உரையிலே ஆரம்பத்திலேயே நமது நாட்டுக்கு ஏற்பட்ட தீங்கினையும், நமது பிரதம மந்திரி அவர்கள் மறைந்துபோன வரலாற்றையும் கூறி நமக்கெல்லாம் ஆறுதல் அளிக்கும் வகையில் தன்னுடைய வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நமது பாரதப் பிரதமர் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் பதவி ஏற்ற 18 மாதங்களே ஆகியிருந்தாலும் கூட, ஒப்பற்ற தலைவர் நேரு அவர்கள் மறைந்த ஒரு புண்ணை மறக்கும்படியான முறையிலே அவர்கள் நாட்டை எதிர்நோக்கி வந்த பல இன்னல்களையும் சமாளித்து மிக உன்னதமாக முறையில் நாட்டுக்குத் தலைமை தாங்கி நடத்தியிருக்கிறார்கள். இந்த நாட்டின் பேரிலே பாகிஸ்தான் போர் தொடுத்து விட்டது என்று

a 160-166-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.